1984 மார்ச் 24]

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அந்த நிலங்களை மேம்படுத்தி அந்த மக்களை மேம்படுத்துவதற்காக என்று கொடுக்கப்பட்ட தொகை. ஆனால் அதை சரிவரப் பயன்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த ஜெர்மன் ஸ்தாபனம் கொடுத்தது 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகை சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்றால் அது உண்மையானால் விவரங்களை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அந்த நிலங்களை மேம்படுத்தி அவர்களுக்குச் சொந்தமாக பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கையாகும். ஆகவே அந்த நிலங்களை அவர்களுக்கு மேம்படுத்தி சொந்தமாக்கி பட்டா கொடுக்க விரைவாக ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பூமிதான வாரியத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள நிலங்கள் உடனடியாக பட்டா செய்யப்படுவதில்லை. ஏனென்றால் வளமில்லாத நிலங்களைத் தான் நமக்கு தானமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் வளமுள்ள நிலங்களாக மாற்றியதற்குப் பிறகு தான் அவைகளை எல்லாம் யோசிக்கலாம்.

ஈரோடு நகராட்சிப் பகுதியில் நடத்தப்படும் வாரச் சந்தை.

434—(*வினா எண் 21660) திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சி வாரச் சந்தையைத் தனியார் நடத்தி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனால் நகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்பட்டு வருவது உண்மையா ?

(இ) நகராட்சியே வாரச்சந்தையை நடத்தும் திட்டமுள்ளதா?

[1984 மார்ச் 24

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஈரோடு நகராட்சி வாரச் சந்தை நடத்திய இடத்தில் விரிவுபடுத்தப்பட்ட நகராட்சி பேருந்து நிலையம் இயங்கி வருவதால் நகராட்சி அனுமதியுடன் வேறு இடத்தில் வாரச் சந்தை தனியார் நடத்தி வருகின்றார்.

(ஆ) இல்லை.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9–50)

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் நான் கேட்டு இருப்பது வாரச் சந்தையைத் தனியாக தனியார்கள் நடத்துவதின் மூலம் நகராட்சிகளுக்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது. அப்படித் தனியார்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்களா ? அப்படியானால் அதன் மூலம் என்ன வருமானம் ஈரோடு நகராட்சிக்கு வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த இடம் குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது. அதன் மூலம் குத்தகையாக ரூ. 160 கிடைத்து வந்தது. அந்த இடத்தில் தான் பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டு அங்கே பேருந்து நிலையம் கட்டிவிட்டோம். ஆகவே தனியார் வேறு இடத்தில் சந்தை நடத்துகிறார்கள். ஆனாலும் கூட தனியார் சந்தைகளை எல்லாம் நகராட்சி மன்றங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு சட்டமுன்வடிவை நாம் கொண்டு வர இருக்கிறோம். ஆகவே கன்கரண்டு லிஸ்ட்டில் இருக்கிற காரணத்தால் அந்தச் சட்ட விதிகளுக்கு எல்லாம் ஒப்புதல் பெறவேண்டும் என்ற நிலையில் நாம் அதை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசுக்கு இந்தச் சட்டமுன்வடிவை அனுப்பி உடனடியாக ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளில் நாம் இப்போது ஈடுபட்டு இருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்காலிக தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்குக் கூட நகராட்சிகளிடம் பணம் இல்லை என்று இப்போது தான் சொன்னார்கள். அப்படியானால் நகராட்சிகளுக்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடிய முறையில் நகராட்சிகளே அதை நடத்துகின்ற முறையில் அந்த சந்தைகளை அமைப்பதற்கு என்ன தடை இருக்கிறது ? சட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி கேட்கவேண்டும் என்று சொல்கிறார்கள். நகராட்சிகள் வாரச் சந்தையை வேறு இடத்தில் ஏற்பாடு செய்து நடத்துவதற்கு என்ன தடை இருக்கிறது? எந்த தடையும் இருப்ப

தாக தெரியவில்லை. அப்படிச் செய்யவேண்டும். தனியார்கள் இன்றைக்கு போட்டி போட்டுக் கொண்டு அந்த ஏலத்தில் கிடைக்கக்கூடிய தொகையை கூட குறைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் அங்கே நடைபெறுகின்றன. அதை தடுப்பதற்கு நகராட்சிகள் வேறு இடத்தில்—இந்த தனியார் சந்தைகள் இருந்தால் இருக்கட்டும்—இந்த நகராட்சி தலைநகரமாக இருக்கிறது—சந்தையை உருவாக்குவதற்கும் அதனால் வருமானம் பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தைகள் மூலமாக ஒரு சில தனி நபர்கள் மட்டுமே வருமானத்தைப் பெற்று கொள்ளை அடிக்கின்ற நிலையைப் போக்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு வந்த பிறகு தான் தனியார் சந்தைகளை பொதுச் சந்தைகளாக உள்ளாட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சந்தைகளாக மாற்ற வேண்டும் என்ற முறையில் நாம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இதை குத்தகைக்கு கொடுத்து இருப்பது அ. இ. அ. தி. மு. க. ஆட்சி வந்த பிறகு அல்ல. அதற்கு முன்னாலேயே இருந்தவர்களாலே கொடுக்கப்பட்டதால் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதே தவிர வேறு அல்ல.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் புது மாதிரியான பேருந்து.

435—(*வினா எண். 17181) **திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் நூறு பேரை ஏற்றிச் செல்லும் புது மாதிரியான பஸ்களை விடுவதற்கு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: (அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் 18-5-1983-லிருந்து 100 பேரை ஏற்றிச் செல்லும் புதுமாதிரியான ஆர்டிக்குலேட்ட் (Articulat d Single D ck) (நீண்ட பேருந்து) என்று புது மாதிரியான பேருந்து ஒன்றினை இயக்கி வருகிறது.

(ஆ) இந்த பேருந்தில் 59 பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டும் 100 பேர் நின்று கொண்டும் பயணம் செய்யலாம். பேருந்தை இயக்குவதற்கு ஒரு ஓட்டுநரும் இரண்டு நடத்துனர்களும் தேவை. இதில் 160 குதிரைத்திறன் இன்சின் பொருத்தப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS